# கிறிஸ்தவ வாழ்க்கை



ரோமர் புத்தக ஆராய்ச்சியின் முடிவுக்கு வந்துவிட்டோம். புரொட்டடஸ்டன்ட் சீர்திருத்தம் உருவாகக் காரணமாக இருந்தது இந்தப் புத்தகம்தான். செவந்த் -டே அட்வென்ட்டிஸ்டுகளாகிய நாம் புரொட் டஸ்டன்டுகள். தொடர்ந்து அப்படியே நீடிக்கவேண்டும். ஏன் அப்படி என்பதற்கான காரணத்தைக் காட்டுவது இந்தப் புத்தகம் தான். வேதாகமம்மட்டுமே நம் நம்பிக்கைகளின் தரக்கோல் ஆகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நம் ஆவிக்குரிய முன்னோர் ரோமிலிருந்து பிரிந்துசெல்லக் காரணமாக இருந்த அதே சத்தியத்தை வேதாகமத்திலிருந்தே நாம் அறிந்துகொண்டோம். விசுவாசத்தால் இரட்சிப்பு என்பதே அந்தச் சத்தியம். ரோமருக்கு பவுல் எழுதின நிருபத்தில் அந்தச் சத்தியத்தை அவர் பலமாக வலியுறுத்துகிறார்.

“ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்று அந்த ரோமச் சிறைச்யதிகாரி கேட்ட கேள்வியில் இவை அனைத்தையும் அடக்கிவிடலாம். அப் 16:30. இந்தக் கேள்விக்கான பதில் ரோமரில் உள்ளது. லூதர் காலச் சபை அந்தப் பதிலைக் கொடுக்கவில்லை. அதுவே, சீர்திருத்தத்தை உண்டாக்கியது. நாம் இந்நிலைக்கு வந்திருக்கிறோம்.

பவுல் இக்கடைசிப் பகுதியில் வேறு சில விஷயங்களைக் குறித்துப் பேசுகிறார். அவர் வலியுறுத்தி வரும் முக்கியக் கருத்து வேறாக இருந்தாலும், இவையும் முக்கியமானவைதாம். ஏனெனனில், பரிசுத்த வேதாகமத்தில் இவை இடம்பெற்றுள்ளன.

பவுல் எவ்வாறு தன் நிருபத்தை முடிக்கிறார்? என்ன எழுதினார்? நாம் பவுலுடைய சந்ததி. நாம் புரொட்டடஸ்டன்ட் முன்னோர்களின் சந்ததி. நமக்கு இக்கடைசிப் பகுதியிலுள்ள சத்தியங்கள் என்ன? இதுபற்றி இந்த வாரத்தில் பார்ப்போம்.

*2017, டிசம்பர் 30 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**மனன வசனம்**

நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. ரோமர் 14:10.

**ஆராய்ச்சிக்கு**

ரோமர் 14-16.

டிசம்பர் 23 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## விசுவாசத்தில் பலவீனமுள்ளவன்

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவுகளைச் சாப்பிடுவதுகுறித்து ரோமர் 14:1-3இல் பேசுகிறார். மனமாறிய புறஜாதியார் அப்படிப்பட்ட உணவுகளைச் சாப்பிடக்கூடாதென எருசலேம் ஆலோசனைச் சங்கம் கட்டளையிட்டிருந்தது. அப் 15. ஆனால், பொதுச் சந்தைகளில் விற்கப்படும் மாமிசஉணவுகள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவையாக இருக்கலாம் என்கிற கேள்வி எப்போதுமே இருந்துவந்தது. (பார்க்கவும்: 1கொரி 10:25). சில கிறிஸ்தவர்கள் அதுபற்றி கவலைப்படவேயில்லை; மற்றவர்கள், சந்தேகத்தின்பேரில் அவற்றிற்குப் பதில் மரக்கறி உணவுகளையே தெரிந்துகொண்டார்கள். அதற்காக அவர்கள் சைவ உணவிற்கும் ஆரோக்கிய வாழ்விற்கும் முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்று சொல்ல முடியாது. அதேபோல, சுத்தமான உணவுகள் மற்றும் அசுத்தமான உணவுகளுக்கு இடையேயுள்ள வேறுபாடு ஒழிந்துவிட்டதாகவும் பவுல் இந்த வசனங்களில் சொல்லவில்லை. ‘எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாம்’ என்றால், சுத்தமான மிருகம் மற்றும் அசுத்தமான மிருகம் என எந்த மிருகத்தின் மாமிசத்தையும் புசிக்கலாம் என்பது தவறான அர்த்தமாகும். புதிய ஏற்பாட்டின் மற்ற வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது தவறான ஒரு கருத்து என்பது புரியும்.

விசுவாசத்தில் பலவவீனமுள்ளவனைச் ‘சேர்த்துக்கொள்வது’ என்றால், ஒருவருடைய சபை உறுப்பினர் அந்தஸ்தையும், சமுதாய அந்தஸ்தையும் முற்றிலும் அங்கீகரிப்பதாகும். அவரிடம் வாக்குவாதம் செய்து வாயடைக்காமல், அவர் தன் கருத்தைக் கூற முழுச் சுதந்திரம் வழங்குவதாகும்.

***அப்படியானால் ரோமர் 14:1-3, நமக்குக் கற்றுத்தரும் நியதி என்ன?***

‘விசுவாசத்தில் பெலவீனனை’ ரோமர் 14:3இல் பவுல் குறைத்துப் பேசுவதாக நினைக்கக்கூடாது. அந்தப் பெலவீனன் பெலப்படுவதற்கான ஆலோசனையையும் அவர் அங்குச் சொல்லவில்லை. தேவனைப் பொறுத்தவரையில், ஒழுக்கச் சீலரான கிறிஸ்தவர்களையும் (ஒழுக்கச்சீலர்கள் என்று தேவனால் அல்ல, பிற கிறிஸ்தவர்களால் தீர்மானிக்கப்படுபவர்களையும்) அவர் ஏற்றுக்கொள்கிறார். ‘தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே.’

***இதுவரையிலும் நாம் படித்ததை ரோமர் 14:4 எவ்வாறு இன்னும் விளக்கமாகக் கூறுகிறது?***

---

இன்று நாம் படித்த நியதிகளை மனதில் வைத்திருக்கவேண்டியது அவசியம்தான்; ஆனாலும் சிலருடைய இருதயம்பற்றி நியாயந்தீர்க்கமுடியாவிட்டாலும், அவருடைய செயல்களை நாம் நியாயந்தீர்க்கவேண்டிய சூழ்நிலைகள் உண்டாகாமல் இருப்பதில்லையா? எல்லாச் சூழ்நிலைகளில் எந்த முடிவுமே எடுக்காமல் நாம் சும்மாவே இருக்கவேண்டுமா? காவற்காரரை ‘குலைக்கமாட்டாத ஊமையான நாய்கள்’ என்று ஏசாயா 56:10 விவரிக்கிறது. எப்போது பேசவேண்டும், எப்போது அமைதியாக இருக்கவேண்டும் என்பதை நாம் எவ்வாறு தெரிந்துகொள்ளலாம்? இதில் எவ்வாறு ஒரு சமச்சீரான நிலையைக் கடைபிடிக்கலாம்?

***மற்றவர்களை நாம் நியாயந்தீர்க்கிறவிதத்தில் ஏன் கவனமாக இருக்கவேண்டும் என்று ரோமர் 14:10இல் பவுல் கூறுகிறார்?***

நாமே சில விஷயங்களைச் செய்கிறவர்களாக இருக்க, மற்றவர்களை அதே விஷயங்களில் கடுமையாக நியாயந்தீர்ப்போம். நாம் செய்வதைவிட மற்றவர்கள் செய்வதுதான் நமக்கு மிகவும் மோசமானதாகத் தெரியும். நம்முடைய மாயமாலம் குறித்து நம்மை நாம் ஏமாற்றலாம்; ஆனால் தேவனை ஏமாற்றமுடியாது; 'நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?' மத்தேயு 7:1-4.

***ரோமர் 14:11இல் பழைய ஏற்பாட்டு வசனத்தை பவுல் சுட்டிக்காட்டுகிறார்; அதிலுள்ள முக்கியத்துவம் என்ன?***

எல்லாரும் நியாயத்தீர்ப்பை எதிர்கொண்டாகவேண்டும்; இதை உறுதிப்படுத்த ஏசாயா 45:23ஐச் சுட்டிக்காட்டுகிறார். ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்பில் நின்றாகவேண்டும் என்பதை 'முழங்கால் யாவும்' 'நாவு யாவும்' எனும் வார்த்தைகள் தெரிவிக்கின்றன. தன் கிரியைகளைக்குறித்து ஒவ்வொருவனும் கணக்கொப்புவிக்க வேண்டும். ரோமர் 14:12. ஒருவருக்காக இன்னொருவர் பதிலளிக்கமுடியாது. இந்த விதத்தில், நாம் நம் சகோதரர்களுக்குப் பதிலாளிகள் அல்லர்.

***ரோமர் 14:14இல் சொல்வதை இந்தக் கருத்தை மனதில்வைத்து எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?***

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகளைக்குறித்தே பேசுகிறார். எது சுத்தமான உணவு, எது அசுத்தமான உணவு என்பதுபற்றி எதுவும் சொல்லவில்லை. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டிருக்கக்கூடிய உணவுகளைச் சாப்பிடுவதில் எந்தத் தவறும் இருக்கப்போவதில்லை என்றே பவுல் சொல்கிறார். விக்கிரகம் ஒரு பொருட்டா? அது ஒன்றுமே இல்லை. 1கொரி 8:4. ஒரு தவளை அல்லது மாட்டு விக்கிரகத்துக்குமுன் படைக்கப்பட்ட உணவு என்றால் நமக்கு என்ன?

எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவராக இருந்தாலும்கூட, ஒருவர் தன் மனச்சாட்சியை மீறும்படி யாரும் கட்டாயப்படுத்தக் கூடாது. இந்த உண்மையை 'பலமுள்ள' சகோதரர்கள் உணர்வதில்லை. 'பெலவீன' சகோதரர்களின் ஒழுக்கத்தை இவர்கள் அலட்சியப்படுத்தி, அவர்களுடைய பாதையில் தடுக்கலைப் போடுகிறார்கள்.

ஆண்டவருக்காக அதிகம் வைராக்கியமுள்ள நீங்களும் பவுல் இங்கு எச்சரிக்கும் தவற்றைச் செய்ய வாய்ப்பிருக்கிறதா? நம்முடைய நோக்கங்கள் எவ்வளவுதான் நல்லவையாக இருந்தாலும், மற்றவர்களுக்காக நாம் மனசாட்சியாகச் செயல்படும் தவற்றை எவ்வாறு செய்யாமல் இருக்கலாம்?

## குற்றமில்லை

***ரோமர் 14:15-23 வசனங்களையும், 1கொரி 8:12,13 வசனங்களையும் வாசியுங்கள். பவுல் சொல்வதை இரத்தினச் சுருக்கமாக எழுதுங்கள். நம் வாழ்வின் எல்லா அம்சங்களிலும் கடைப் பிடிக்கக்கூடிய என்ன நியதி இதில் உள்ளது?***

---

கிறிஸ்தவ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்களை சரியான கண்ணோட்டத்தில் ரோமர் 14:17-20இல் பவுல் கூறுகிறார். உணவுப்பழக்கத்தில் கவனம் அவசியம் தான்; ஆனால், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிசத்தைப் புசிப்பதைப் பார்க்கிலும் மரக்கறிகளைச் சாப்பிட சிலர் தீர்மானித்தால், அதுகுறித்து யாரும் வாக்குவாதம் செய்யவேண்டாம். மாறாக நீதி, சமாதானம், பரிசுத்த ஆவிக்குள் சந்தோஷம் போன்றவற்றில் கவனம் செலுத்தவேண்டும். உணவுப்பழக்கம் குறித்து இன்று நம் சபையில் காணப்படும் கேள்விகளைக் கையாள இது எவ்வாறு உதவி யாக இருக்கும்? ஆரோக்கிய செய்தியும், உணவுப்பழக்கம் குறித்த போதனை களும் நமக்கு ஆசீர்வாதமானவைகள்தாம்; ஆனாலும் எல்லாருக்கும் இதில் ஒரு மித்த கருத்து இருக்கப்போவதில்லை; அவர்களுடைய கருத்துகளையும் நாம் மதிக்கவேண்டும்.

***மக்களுடைய தீர்மானங்களை நாம் மதிக்கவேண்டும் என்பதெல்லாம் நல்லதுதான்; ஆனாலும், 'நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்' என்று ஒரு முக்கியமான எச்சரிக்கையை பவுல் முன்வைக்கிறார். ரோமர் 14:22. அவர் கொடுக்கும் எச்சரிப்பு புரிகிறதா? இந்த விஷயத்தில் பவுல் சொல்லும் அனைத்திற்கும் இது எவ்வாறு சரி யான ஒரு தீர்வாக இருக்கிறது?***

“நான் என்ன சாப்பிடுகிறேன்? என்ன உடுத்துகிறேன்? என்ன பொழுது போக்கில் ஈடுபடுகிறேன்? இவைபற்றி யாருக்கும் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை” என்று யாராவது சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? மனிதசஞ் சாரமற்ற உலகத்திலா நாம் வாழுகிறோம்? நம் செயல்களும் வார்த்தைகளும் உணவுப்பழக்கமும் மற்றவர்களில் நன்மை அல்லது தீமைக்கான தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. அது எவ்வாறு என்று நாம் உணர்வது கடினம். நீங்கள் செய்கிற 'தவற்றை' யாராவது பார்த்தால், அவரும் அதே தவற்றைச் செய்யத் தூண்டப்படலாம். அப்படியெல்லாம் இல்லை என்று நினைத்தால், உங்களை நீங்களே ஏமாற்றுகிறீர்கள். நான் எப்படி அவரைத் தவறுசெய்யத் தூண்டுகிறேன்? என்றெல்லாம் நீங்கள் கேள்வி எழுப்பமுடியாது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு வருக்கு ஒருவர் பொறுப்பாளிகள். நம்மைப் பார்த்து ஒருவர் தவறுசெய்துவிட்டால், நாம்தான் குற்றவாளியாகிறோம்.

---

நீங்கள் எப்படிப்பட்ட முன்மாதிரியைக் காட்டுகிறீர்கள்? மற்றவர்கள், குறிப்பாக வாலிபர் கள் அல்லது புதிய விசுவாசிகள் எல்லா விஷயங்களிலும் உங்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றினாலும், எந்தத் தீங்கும் விளையப்போவதில்லை என்கிற நிச்சயம் உங்களுக்கு இருக்கிறதா? உங்களைப்பற்றி உங்களுடைய பதில் சொல்வது என்ன?

நம்முடைய கருத்துக்கு மாறுபடுகிறவர்களை நாம் நியாயந்தீர்க்கக்கூடாது, நம் செயல்களால் மற்றவர்கள் இடறலடையும் விதத்தில் தடைக்கல்லாக இருக்கக் கூடாது; இதைச் சொல்லிவிட்டு, விசேஷித்த நாட்கள் குறித்து பிரச்சனையை பவுல் எழுப்புகிறார். அதாவது, சிலர் அவற்றைக் கைக்கொள்ள விரும்புகிறார்கள், சிலர் அவற்றைக் கைக்கொள்ள விரும்புவதில்லை.

***ரோமர் 14:4-10இல் பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? நான்காம் கற்பனையைப் பற்றியா பேசுகிறார்? இல்லையென்றால், அதற்கான காரணத்தைக் கூறுங்கள்.***

எந்த நாட்களைப் பற்றி பவுல் பேசுகிறார்? சில நாட்களை ஆசரிப்பது குறித்தோ ஆசரிக்காதது குறித்தோ ஆதிகாலச் சபையில் சர்ச்சை எழுந்திருந்ததா? கலாத்திய கிறிஸ்தவர்கள் 'நாட்களையும் மாதங்களையும் காலங்களையும் வருஷங்களை யும்' பார்த்ததாக அவர்களைச் சாடுகிறார் பவுல். கலா 4:9,10. எனவே, அப்படி யொரு பிரச்சனை இருந்திருக்கிறது. சபையில் இருந்த சிலர், கலாத்திய கிறிஸ்தவர் களை விருத்தசேதனம்பண்ணவும், மோசேயினுடைய பிரமாணத்தின் மற்ற நியமங்களைக் கைக்கொள்ளவும் வற்புறுத்தியதாகப் பார்த்தோம். இதே கருத்து களால் ரோமச்சபையிலும் தீமை விளையக்கூடுமென பவுல் பயந்தார். ஆனால், ரோமச் சபையில் யூதக்கிறிஸ்தவர்கள்தாம் பிரச்சனையில் இருந்திருக்கக்கூடும்; ஏனென்றால், யூதப் பண்டிகைகளை இனி தாங்கள் கடைப்பிடிக்கவேண்டிய அவசியமில்லை என்று அவர்களுக்குப் போதிக்கவேண்டியிருந்தது. எனவே, 'இந்த விஷயத்தில் உங்கள் விருப்பப்படிச் செய்யுங்கள்; உங்கள் கருத்துக்கு ஒத்துப்போகாதவர்களை நியாயந்தீர்க்காதிருங்கள்' என்று பவுல் இங்கு சொல் கிறார். சில கிறிஸ்தவர்கள் யூதப்பண்டிகைகளில் சிலவற்றைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்திருக்கக்கூடும். 'தாங்கள் கடைப்பிடிக்கவேண்டுமென அவர்கள் நினைத்தால் கடைபிடிக்கட்டும்' என்று பவுல் கூறுகிறார்.

ரோமர் 14:5இல் ஓய்வுநாளைப்பற்றி பவுல் பேசுகிறார் என்று சொல்வது ஆதாரமற்றது. ஓய்வுநாளைப்பற்றி ஏனோதானோவென பவுல் பேசியிருப்பாரா? நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதை பவுல் வலியுறுத்துகிறார். எனவே, விக் கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றைப் புசிப்பது போன்ற ஒரு விஷயமாக ஓய்வுநாளை அவர் கருதப்போவதில்லை. ஆனால், ஓய்வுநாள் ஆசரிப்புபற்றி அவர் பேசுவதாக பொதுவாகச் சொல்கிறார்கள்; அதில் உண்மை இல்லை. பவு லின் எழுத்துகளை மக்கள் எவ்வாறு கருதிகிறார்களென பேதுரு கூறுவது உண்மை தான்: 'எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளிலல் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர் களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.' 2பேதுரு 3:16.

ஓய்வுநாள் விஷயத்தில் உங்களுடைய அனுபவம் என்ன? ஓய்வுநாளில் அடங்கியுள்ள ஆசீர்வாதத்தைப் பெற்றீர்களா? ஓய்வுநாள்மூலம் ஆண்டவர் நமக்கு அருளும் ஆசீர்வாதங் களை முற்றிலுமாக நாம் பெற்றுக்கொள்ள, நாம் என்ன மாற்றங்களைச் செய்யவேண்டி யுள்ளது?

## இறுதி வார்த்தைகள்

*ரோமர் 15:1-3இல் சொல்லப்படும் முக்கியச் சத்தியம் என்ன?*

---

**இயேசுவின் சீடர்களாக இருப்பதின் அர்த்தம்குறித்து அதிகமாக விளங்கிக்கொள்வதற்கு இவ்வசனங்கள் எவ்விதத்தில் உதவுகின்றன?**

---

**இதே கருத்தை வலியுறுத்தும் வேறு வசனங்களையும் கூறுங்கள். முக்கியமாக, நீங்கள் எவ்வாறு இந்த நியதிக்கு உண்மையாக வாழமுடியும்?**

---

**தன் நிருபத்தின் முடிவில் என்னென்ன ஆசீர்வாதங்களை பவுல் கூறுகிறார்? ரோமர் 15:5,6, 13,33.**

தம் பிள்ளைகள் விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்கு தேவன் உதவுகிறார்; அதைத்தான் பொறுமையின் தேவன் என்று பவுல் குறிப்பிடுகிறார். பொறுமை என்பதற்கான கிரேக்க வார்த்தை **ஹுபோமோன்**; சகிப்பு தன்மை, நிலைகுலையாத சகிப்புத்தன்மை என்று அதற்கு அர்த்தமாகும். 'ஆறுதல்' என்பதற்கு 'ஊக்கமூட்டுதல்' என்றும் அர்த்தம் கூறலாம். ஆறுதலின் தேவன் என்றால், அவர் நம்மை ஊக்கப்படுத்துகிற தேவன் என்று அர்த்தமாகும். நம்பிக்கையின் தேவன் என்றால், மனித இனத்திற்கு நம்பிக்கையூட்டியவர் என்று அர்த்தமாகும். சமாதானத்தின் தேவன் என்றால், சமாதானத்தைத் தருகிற தேவன் என்றும், அவருக்குள்தாம் சமாதானத்தைக் காணமுடியும் என்றும் அர்த்தமாகும்.

**பல வாழ்த்துதல்களுக்கு பிறகு, பவுல் எவ்வாறு தன் நிருபத்தை முடிக்கிறார்? ரோமர் 16:25-27.**

தேவனைத் துதித்துப் போற்றி, பவுல் தன் நிருபத்தை முடிக்கிறார். ரோமக் கிறிஸ்தவர்கள் உட்பட கிறிஸ்தவர்கள் அனைவரும் தேவனுக்குமுன் மீட்கப்பட்ட அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாக நிற்கவும், விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டு தேவ ஆவியானவரால் வழிநடத்தப்படவும் தேவனை மட்டுமே நம்பி வாழமுடியும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இந்த நிருபத்தை எழுதும்படி ஆண்டவர் பவுலை ஏவினார். ஆனால், எதிர்காலத்தைப்பற்றி ஆண்டவர் என்னவெல்லாம் பவுலுக்கு வெளிப்படுத்தினார் என்பது தெரியவில்லை.

ஆனால் 'விசுவாசத் துரோகம்' நேரிடும் என்பது அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2தெச 2:3. கடைசிக்கால நிகழ்வுகளில் பவுலுக்கும் அவருடைய எழுத்துகளுக்கும் குறிப்பாக இந்த நிருபத்திற்கும் எவ்வளவு பங்கிருக்கிறது என்பது தெரியவில்லை. அது ஒரு விஷயமும் அல்ல. ஆனால் புரொட்டஸ்டன்ட் மார்க்கம் உருவாவதற்கு இந்த நிருபம்தான் காரணமாக இருந்தது. பூமியிலுள்ள யாவரும் 'மிருகத்தைப் பின்பற்றினாலும்' (வெளி 13:3) இயேசுவுக்கு உண்மையாக இருப்பதற்கு விரும்புகிறவர்கள் ரோமரின் வசனங்களில்தான் தங்கள் விசுவாசத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் அடித்தளத்தைக் கண்டார்கள்; காண்பார்கள்.

"ஒய்ட் தம்பதியரிடம் தேவபிள்ளைகள் வந்து, தங்கள் பாரங்களைச் சொல்லி, ஆலோசனைகேட்க நினைக்கிற ஆபத்தைக் கண்டேன். அது சரியல்ல. சோர்ந்து, பாரத்தோடு இருப்பவர்கள் தம்மிடம் வரும்படி அவர்களுடைய அன்பான, மன துருக்கமான இரட்சகர் அழைக்கிறார்; அவர்களை அவர் விடுவிப்பார். எங்களிடம் அநேகர் வந்து, நான் இதைச் செய்யலாமா? இந்த வேலையில் ஈடுபடலாமா? அல்லது, இந்தெந்த உடைகளை அணியலாமா என்று கேட்கிறார்கள். நான் அவர்களிடம், 'நீங்கள் கிறிஸ்துவின்சீடர்களெனச் சொல்கிறீர்கள். வேதாகமத்தை வாசியுங்கள். பூமியில் மனிதர்கள் மத்தியில் வாழ்ந்த நம் அன்பு இரட்சகரின் வாழ்க்கையை ஜெபத்தோடு கவனமாகத் தியானியுங்கள். அவருடைய வாழ்க்கையைப் பின்பற்றினால் குறுகலான பாதையிலிருந்து விலகுவதில்லை. உங்களுக்காக நாங்கள் மனச்சாட்சியாக இருக்கவே முடியாது. இப்படிச் செய்யுங்கள் என்று நாங்கள் சொன்னால், நீங்கள் நேரடியாக இயேசுவிடம் செல்லாமல், எங்களை வழிகாட்டியாகப் பார்ப்பீர்கள்' என்றேன்" – *EGW, 2T, p 118,119.*

"நமக்குள்ள கடமையை பிறர்மேல் சுமத்தி, நாம் செய்யவேண்டியதை அவர்கள் சொல்ல எதிர்பார்க்கக்கூடாது. ஆலோசனை கேட்க மனிதர்களை நாம் சார்ந்திருக்க முடியாது. நம் கடமை என்னவென்று நமக்குப் போதிக்க நம் ஆண்டவர் சித்தமுள்ளவராக இருக்கிறார். தேவனுக்குப் பிரியமற்ற எதையும் செய்வதில்லையெனத் தீர்மானிப்பவர்கள், தங்கள் திட்டத்தை தேவனிடம் சொல்லும்போது, தாங்கள் செல்லவேண்டிய பாதையை அறிந்துகொள்வார்கள்." – *DA, 2T, p 168.*

"தங்களுக்கு எல்லாம் தெரியும் என்கிற மனநிலை உள்ளவர்கள் எப்போதுமே சபையில் இருந்திருக்கிறார்கள். இத்தகைய சுயச்சார்பு மனநிலையானது மனிதர்கள் தங்கள்மேலேயே அதிக நம்பிக்கைவைப்பதற்கு வழிநடத்தும்." – *AA, 2T, p 163,164.*

## கலந்துரையாடக் கேள்விகள்

*இந்த வாரத்தில் நாம் படித்த கருத்துகளை மனதில்வைத்து, பின்வரும் விஷயங்களில் நாம் எவ்வாறு சமநிலையோடு நடந்துகொள்ளலாம்?*

1. *நம் நம்பிக்கையில் உறுதியாக இருக்கும் அதே வேளையில், நம்மைப் போன்ற கருத்தில்லாதவர்களை எவ்வாறு நியாயந்தீர்க்காமல் இருக்கலாம்?*
2. *நம்முடைய மனசாட்சிக்கு உண்மையாகவும், மற்றவர்களுடைய மனசாட்சியாகச் செயல்படாமலும் இருக்கும் அதே வேளையில், தவறுசெய்கிற ஒருவரை நாம் எவ்வாறு திருத்தலாம்? எப்போது வாய்திறக்கலாம்? எப்போது அமைதியாக இருக்கலாம்? எப்போது அமைதியாக இருப்பது நம்மைக் குற்றவாளியாக்கும்?*
3. *ஆண்டவருக்குள் விடுதலைபெற்றவர்களாகவும், நம்மை முன்மாதிரிகளாகப் பார்ப்பவர்களுக்கு நல்ல முன்மாதிரிகளாகவும் எப்படி இருக்கமுடியும்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*